## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை
## கண்டி மாவட்டம்

-----------------------------------

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபைக்கு உரித்தான 03 நூலகக் கட்டிடங்களின் காணி உரிமை பொறுப்பேற்கப்பட்டிராததுடன் இது தொடர்பான கணக்கீட்டுக் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச நிறுவகங்கள் சிலவற்றின் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த எனினும், சபைக்கு உரிமை மாற்றப்பட்டிராத ரூபா 34,819,323 பெறுமதியான 07 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 04 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,530,715 ஆனதுடன் அதில் 01 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,037,817 தொகையாகக் காணப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலவிய 03 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 10,970,700 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,738,267 ஆகக் காணப்பட்டது. இம் மீதியில் 2016 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 183,488 தொகை மேலும் செலுத்த வேண்டிய நிலையில் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்களிற்கு உரித்தான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 990,922 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | |
| | 49 ஆம் பிரிவு | சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அத்துமீறிய நிர்மாணிப்புகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டு மற்றும் இதற்கு முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட 05 அத்துமீறிய நிர்மாணிப்புகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1971 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| | 21 ஆம் பிரிவு | 2010 முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது 1355 அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டங்களிற்கு உரித்தாக 100 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,806,565 ஆகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 32,178,488 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,628,077 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

ஆண்டின் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் செலவினம் திட்டமிடப்பட வேண்டிய போதிலும் நிகழ்ச்சித்திட்டங்களின் படி, மீளாய்வாண்டின் மீண்டெழும் வருமானம் மற்றும் செலவினத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் 05 நிகழ்ச்சித்திட்டங்களில் வருமானத்திற்கு ஒப்பாக 77 சதவீதம் முதல நூற்றுக்கு நூறு சதவீதத்திற்கு மேற்பட்ட செலவினத்தையும் காணக்கூடியதாக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்டவை | 2015 பெறுவனவுகள் | | | 2015.12.31 இல் உள்ளவாறு நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்ட கழிவு/ பதிவழிப்பு | குறைவாகக் கிடைக்கப் பெற்றவை | 2015 பட்டியலிடப் பட்டவற்றிலிருந்து பெறுவனவு | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| வீத வரியும் வரியும் | 5,560,316 | 9,659,109 | 230,129 | 3,259,112 | 7,024,187 | 4,705,997 |
| கடை/ கட்டிட குத்தகை வாடகை | -- | 156,850 | -- | -- | 75,550 | 81,300 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 233,456 | 1,972,135 | -- | 215,566 | 1,688,370 | 301,655 |
| ஏனைய வருமானம் | 29,783,638 | 37,863,076 | -- | 27,292,739 | 1,993,497 | 38,360,478 |
| **மொத்தம்** | | | | | | 43,449,430 |

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 43,449,430 தொகையான நிலுவை வருமான மீதி ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவையான வீத வரி வருமானம் ரூபா 5,474,566 தொகையானதுடன் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 9,659,109 தொகையாகும். இதில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 3,259,112 தொகையும் ரூபா 6,905,044 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இது நூற்றுவீதமாக 59 சதவீதமும் 72 சதவீதமும் ஆகும். இதன் படி, வீதவரி அறவீடு நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) ரூபா 1,000 இனைப் பார்க்கிலும் கூடுதலான பெறுமதியுள்ள வீதவரி செலுத்தப்பட வேண்டிய 1836 வரிவிதிப்பாளர்களில் 01 முதல் 34 வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட வீத வரி ரூபா 4,620,247 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவையான வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அரசாங்கத்துடன் தொடர்பான நிறுவகங்கள் மற்றும் சில வியாபார நிறுவகங்களிடம் இருந்தும் ஆதனங்களில் இருந்தும் வீத வரி அறவீடு திருப்திகரமான நிலையில் இராமை அவதானிக்கப்பட்டதுடன் அத்தகைய வரி அலகுகள 27 இல் ரூபா 142,157 தொகையான நிலுவை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவியது.

**2.3.3 குத்தகை வாடகை**

**கடை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபைக்கு உரித்தான மெதவல வியாபாரக் கட்டிடத்தொகுதியின் கடைகளும் விழா மண்டபங்களும் மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கிடப்படுவதற்காக 2010 ஒக்டோபர் 07 ஆம் திகதியும் 2015 யூலை 13 ஆம் திகதியும் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், 2015 நவம்பர் 18 ஆம் திகதி வரையிலும் 01, 06, 10, 11, 12 ஆம் இலக்கக் கடைகளும் விழா மண்டபங்களும் வாடகைக்கு வழங்கப்படுவதற்கான முடியாதிருந்தது.

(ஆ) வாடகை தருனருடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது சபையிடம் உள்ள வாராந்த சந்தையில் உள்ள 09 கடைகள் 2014 ஆகஸ்ட் 25 ஆம் திகதி முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

**(அ) வியாபார அனுமதிப்பத்திரம்**

சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வியாபார அனுமதிப்பத்திரம் பெறப்படாது வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் சென்ற 369 வியாபாரங்களில் இருந்து ரூபா 235,500 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களிற்கு இணங்க 2008 சனவரி 25 ஆம் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் “இ” பிரிவில் நிரந்தர செயற்திட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள 65

வியாபார அலகுகளிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம்

2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 20 முச்சக்கர வண்டிச் சங்கங்கள் பதிவாகியிருந்ததுடன் இவற்றில் 19 சங்கங்களில் இருந்து ரூபா 237,400 தொகையான பணம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 627,666 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 36,130,730 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் விற்பனை செய்யப்படும் காணிகளின் பகுதிகளில் 01 சதவீதம் வரித் தொகை காணி விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பங்களின் போது அறவிடப்படுவதற்காக, தரகர்களிடம் இருந்து காணித் துண்டுகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ஒன்று பெறப்பட்டு விற்பனைக்கு முன்னர் வரித் தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் காணி விற்பனை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேலும் சபைக்கு பெறவேண்டிய நிலுவையான வருமானத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் போது உடுவாவல கஹவத்த எனும் பெயரிலான காணி கூறாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் சபையின் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 07 ஆம் இலக்கத் துண்டின் 8.3 பேர்ச் காணிப் பகுதி பொது நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் 06 ஆம் இலக்கத்தின் கீழ் பெறப்பட்டிருந்த 02 பேர்ச் இல் அமைந்துள்ள பொதுக் கிணறும் மூடப்பட்டிருந்தது.

(இ) உத்தியோகபூர்வப் போக்குவரத்துகளுக்காக வாகனம் பயணிக்கப்படுகையில், அன்றைய நாளின் இறுதியில் ஓட்ட அட்டவணைகள் பூர்த்திசெய்யப்பட்டு, உரிய வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தர்களிடம் இருந்து கையொப்பம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையின் 04 வாகனங்களின் 662 கி.மீ. ஓடப்பட்ட பயணங்களிற்காக ஓட்ட அட்டவணைகள் எழுதப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அமைச்சு மற்றும் செயற்திட்டங்களில் இருந்து சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த 07 வாகனங்களின் உரிமை சபைக்குப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் வாகனம் பழுதானமை மற்றும் சாரதிகள் இன்மை எனக் குறிப்பிட்டு சபையின் 08 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன.

(உ) சபையிடம் உள்ள ஆர்எஸ் - 1577 ஆம் இலக்க ஜேசீபீ பெக்கோ லோடர் மீளாய்வாண்டின் போது 14 நபர்களிடம் இருந்து பணம் அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காகப் பெறவேண்டிய ரூபா 147,120 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

எந்தவித செயல்சாத்திய ஆய்வும் மேற்கொள்ளப்படாது மெதவல வியாபாரத் தொகுதியின் கீழ் மாடியில் கடையொன்று ரூபா 30,000 இற்கும் மேல்மாடியில் உள்ள விழா மண்டபம் ரூபா 31,000 இற்கும் மதிப்பிடப்பட்டு, கேள்வி கோரப்பட்ட போதிலும், எவரும் அதற்காக முன்வந்திராததுடன், 2016 ஏப்ரல் 20 ஆம் திகதி வரையிலும் மூடிவைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையிலிருந்து நிர்மாணிக்கப்பட்டிருந்த வியாபாரச் சந்தைத் தொகுதியில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் அக் கடன் தொகையின் தவணைப்பணத்தையும் வட்டியையும் செலுத்துவதற்கு போதாதிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

**3.3.1 உடுவாவல நிகதன்ன வீதி திரு. சமரசிங்ஹ அவர்களின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள சுவரை நிர்மாணித்தல் - ரூபா 100,000**

நிகதன்ன வீதியின் எல்லையில் குடியிருக்கும் தமது வீட்டிற்கு நீர் வழிந்து வருவதைத் தடுக்கும் தேவைப்பாட்டில் ரூபா 250,000 தொகையான சொந்தப் பணத்தைச் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் சுவர் சபையால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிக்கப்பட்டதாகப் போலியாகக் குறிப்பிடப்பட்டு மதிப்பீடும் பட்டியல்களும் தயாரிக்கப்பட்டு ரூபா 100,000 தொகை ஒப்பந்தக்காரர் சங்கத்திற்கு செலுத்தப்பட்ட நிதி முறைகேடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவு 2015 ஒக்டோபர் 28 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**3.3.2 போதொட்ட போபிட்டியவத்த வீதி அபிவிருத்தி ரூபா 150,000**

நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்புச் சுவரின் மதிப்பீட்டு அளவைப் பார்க்கிலும் பாரியளவு கற்கள் இடப்பட்டிருந்ததுடன் சுவர் நிர்மாணிக்கப்படுவதற்காக எடுக்கப்பட்டிருந்த சீமேந்துக் கலவையும் மதிப்பீட்டுத் தரத்தைப் பார்க்கிலும் குறைவாக இடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

### 3.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பழைய பிரதேச சபை அலுவலகத்தில் காணப்பட்ட பொருட்களை வைத்துக்கொள்வதற்காக பிரதேச சபை அலுவலகத்திற்கு அண்மையில் உள்ள வெளி நபருக்கு உரித்தான ஓர் கட்டிடம் ஒன்றில் ஓர் அறை மாதம் ஒன்றிற்கு ரூபா 8,000 படி சபையால் வாடகைக்குப் பெறப்பட்டிருந்த 2014 மார்ச் 03 ஆம் திகதி முதல் 2015 திசெம்பர் 18 ஆம் திகதி வரையான 18 1/2 மாதங்களுக்காக ரூபா 148,000 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. இவ் அறையை வாடகைக்குப் பெறுவதற்காக சபை அங்கீகாரமும் வாடகை செலுத்தப்படுவதற்காக அரசாங்க மதிப்பீடொன்றும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு